செ.வெ.எண்: 67 நாள்: 28.09.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

----

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் இடங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வேட்பு மனு தாக்கல் 26.09.2016 அன்று முதல் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றது. இதில் திருவரங்குளம், கறம்பக்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் அமைக்கப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் பெறப்படும் இடங்கள் மற்றும் வாக்குப்பெட்டிகள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் ஆலங்குடி அரசினர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மழையூர் அரசு மேல்நிலைப்பள்ளி, புதுப்பட்டி அரசினர் பல்தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களில் அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் திருவரங்குளம், கறம்பக்குடி மற்றும் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சித்தலைவர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கு போட்டியிடுபவர்களிடமிருந்து வேட்பு மனுக்கள் பெறும் இடம், விண்ணப்பம் வழங்கும் இடம், வாக்காளர் பட்டியல் விற்பனை செய்யுமிடம், வழங்கப்படும் விண்ணப்பங்கள் போன்ற பல்வேறு தகவல்கள் பார்வையிடப்பட்டது.

மேலும், விற்பனை செய்யப்படும் வாக்காளர் பட்டியல் குறித்த தகவல்களை பதிவேடுகளில் பதிவு செய்யவும், வேட்பாளர்கள் வேட்பு மனுதாக்கல் செய்ய வரும் பொழுது அவர்களை முன்மொழிபவர்களை தவிர பிற நபர்கள் வருவதை தவிர்க்கவும், வாக்கு எண்ணும் மையங்கள் விரைவாக அமைக்கும் வகையில் வாக்கு எண்ணும் மையங்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தி துாய்மை படுத்தவும், வாக்கு எண்ணும் மையங்களில் தேவையான அளவு மின்விளக்குகள் ஒலிப்பெருக்கி கண்காணிப்பு கேமராக்கள் போன்ற பல்வேறு வசதிகளை ஏற்படுத்தவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது தனித்துணை ஆட்சியர்(ச.பா.தி)திருமதி.சூரியகலா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ஜானகிராமன், திரு.மணிசேகரன், திரு.கருப்பையா, திரு.குமாரவேலன், திரு. ரவி, திரு.ஆறுமுகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**